**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. No.84/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-1 |
| Name | : | ஹரிகிருஷ்ணன்-LW-1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

A1, A2 present.,

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1.நான் கே.புதூரில் குடியிருந்த வருகிறேன். நான் தற்போது பைபர் நெட்வொர்க் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு திருப்பூரில் இருந்து கூலிப்பாளையத்தில் நிட்டிங் ஆபரேட்டராக வேலை செய்து வந்தேன். வழக்கு சம்பந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் எனக்கும் எதிரிகளுக்கும் அதாவது ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே ஒரு வாய் தகராறு ஏற்பட்டு இருந்தது அப்போது கம்பெனி ஓனர் இருவரையும் காம்ப்ரமைஸ் செய்து விட்டார்.

2.அதன் பின்பு மூன்று மாதங்கள் கழித்து யாரோ பின்னாடி வந்த தள்ளிவிட்டார் போல் இருந்தது அப்போது நான் சந்தேகப்பட்டு ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்து விட்டேன்.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியமாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.போலீஸ் விசாரணையின் போது என்னுடன் வேலை பார்த்த செல்வம் ஆண்டி செல்வம் மற்றும் சுதந்திரராஜன் ஆகியோர் வந்து கம்பெனியில் என்னை தகாத வார்த்தைகளால் பேசி செல்வம் மற்றும் ஆண்டி செல்வம் ஆகியோர் பிடித்துக் கொள்ள சுதந்திரராஜன் என்னை தாக்கினார் என்று போலீசாரணையின் போது சொல்லிவிட்டு மேலும் நான் தப்பி செல்லும்போது ஆண்டு செல்வம் என் முதுகில் வெட்டினார் என்றும் மேலும் என்னுடைய இடது குதிங்கால் மற்றும் இடது கைவிரல் ஆகிய இடங்களில் இடது மணிக்கட்டு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினார்கள் என்றும் என் முகத்தில் குத்தினார்கள் என்றும் காவல்துறையினர் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியில்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.02.26 19:32:58 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.